[2013 மே 6

409—

ஆரம்ப சுகாதார நிலையம்

***21071—திரு. ஆ.க. அரங்கநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஒன்றியம், பூதமங்கலம் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஒன்றியம், பூதமங்கலம் கிராமத்தில் மக்கள்தொகை குறைந்த அளவே உள்ளதாலும், அங்கு துணை சுகாதார நிலையம் ஏற்கெனவே செயல்பட்டு வருவதாலும், பூதமங்கலம் கிராமத்திலிருந்து 8 கி.மீ. தொலைவுக்குள் அவலூர்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையமும், பாடகம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், தற்போது பூதமங்கலம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன் அவர்கள்.*

திரு. ஆ.க. அரங்கநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரை கோடி தொண்டர்களின் உயிர் மூச்சாய், 7 கோடி தமிழ் மக்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிற தமிழகத்தினுடைய மாண்புமிகு நிரந்தர முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

2013 மே 6]

திருவண்ணாமலை மாவட்டத்தில் புதியதாக வரையறுக்கப்பட்ட, கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள துரிஞ்சாபுரம் ஒன்றியம், பூதமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலேயே மிகப் பெரிய ஊராட்சி. அது 5,000 வாக்காளர்களையும் 10,000 மக்கள் தொகையையும் கொண்ட ஊராட்சியாகும். மிகப் பெரிய ஊராட்சி என்ற காரணத்தினாலே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'தாய்' திட்டத்தின் மூலமாக 15 குக்கிராமங்களை உள்ளடக்கிய அந்த ஊராட்சிக்கு 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, அதன் மூலமாக 150 புதிய தெரு விளக்குகளும், சிமென்ட் சாலைகள், தார்ச் சாலைகள், குடிநீர் வசதிகளை சிறப்பாகச் செய்து முடித்திருக்கிறார்கள். மேலும், அந்தப் பகுதியைச் சுற்றி ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்திலுள்ள வம்சலாபாத் ஊராட்சியில் 2,600 வாக்காளர்களும், 5,000 மக்கள்தொகையும், அதேபோல, 2 கி.மீ. அருகிலேயேயுள்ள வேடந்தவாடி ஊராட்சியில் 4,000 வாக்காளர்களும், 8,000 மக்கள்தொகையும் கொண்டு, ஒட்டுமொத்தமாக 22,000 மக்கள்தொகையைக் கொண்ட அதன் மத்தியப் பகுதியிலே அமைந்துள்ள இந்த பூதமங்கலம் ஊராட்சிக்குப் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில், மங்கலம் ஆரம்ப சுகாதார நிலையமும், நார்த்தம்பூண்டி ஆரம்ப சுகாதார நிலையமும், துரிஞ்சாபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றன. இதில் மங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது. பூதமங்கலம் கிராமத்திற்கு 5 கி.மீ. தொலைவில், அவலூர்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கி.மீ. தொலைவில் பாடகம் ஆரம்ப சுகாதார நிலையமும், 28 கி.மீ. தொலைவில் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையும், 30 கி.மீ. தொலைவில் போளூர் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன. பூதமங்கலம் கிராமத்தில் மக்கள்தொகை மிகக் குறைந்த அளவிலேயே உள்ளதாலும், இக்கிராமத்திற்கு அருகில் செயல்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளன என்பதாலும் பூதமங்கலம் கிராமத்தில் உள்ள துணை சுகாதார*

நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றி அமைக்கும் நிலை தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன் அவர்கள்.

திரு. ஆ.க. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு சட்டமன்றத்திலே நான் கோரிக்கை வைத்தபோது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் பூதமங்கலம் ஊராட்சிக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க துறையின் மூலமாக 2 ஏக்கர் நிலம் வேண்டுமென்று கோரப்பட்டு, அது பார்வையிடப்பட்டு அந்த நேரத்திலே 2 ஏக்கர் நிலம் வழங்க முடியாததன் விளைவாக, இப்போது மீண்டும் அந்தக் கோரிக்கையை இங்கே நான் வைத்திருக்கிறேன். அந்த பூதமங்கலம் ஊராட்சிக்கு, ஏறக்குறைய 10,000 மக்கள்தொகை கொண்ட அந்தப் பகுதிக்கு டி.ஐ. டவுன் பஸ் ஒன்றே ஒன்று 6 நடைகள் வந்து செல்கின்றது. அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையினை ஏற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று அந்தப் பகுதியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூதமங்கலம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இது மேம்படுத்தப்பட்ட மங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்தது. பூதமங்கலம் ஊராட்சி மற்றும் அதன் சுற்றுப்புறமுள்ள கிராமங்களிலுள்ள மொத்த மக்கள்தொகை 7 ஆயிரம். ஆனால், ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு 30 ஆயிரம் மக்கள்தொகை தேவை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியினுடைய முக்கியத்துவத்தை மீண்டும், மீண்டும்

2013 மே 6]

வலியுறுத்துவதனால், அதைத் துறையின் சார்பாக மீண்டும் ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) உணவு தானிய சேமிப்புக் கிடங்குகள் கட்டுதல், வேளாண் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சிறப்பு காசுக் கடன் வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி எண் 110—ன்கீழ் 3 அறிக்கைகளை அளிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். மேலும், அமர்ந்து கொண்டு அறிக்கைகள் அளிப்பதற்கு அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதைக் கொள்கையாகக் கொண்டுள்ள எனது தலைமையிலான அரசு, பொது விநியோகத் திட்டத்தைச் சிறப்புடன் செயல்படுத்தி வருவதோடு மட்டுமல்லாமல், உணவுப் பாதுகாப்பின் அங்கங்களான உற்பத்தி, சேமிப்பு, விற்பனை ஆகியவற்றில் முக்கியப் பங்காற்றி வரும் நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மற்றும் கூட்டுறவுத் துறை ஆகியவற்றையும் வலுப்படுத்தி வருகிறது.

வேளாண் உற்பத்தியைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருவதால், உணவு தானியங்களின் உற்பத்தி அதிகரித்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)